OPEN ACCESS

Manuscript ID:
TAM-05032021-3645

Volume: 5

Issue: 3

Month: January

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 23.10.2020

Accepted: 20.11.2020

Published: 01.01.2021

Citation:
Sivashanmugarajah, S. "A Study on Herb Based Place Names of Mullaitivu District, Sri Lanka." *Shanlax International Journal of Tamil Research,* vol. 5, no. 3, 2021, pp. 80–98.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i3.3645

*Corresponding Author:
sivashanmugarajah@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# A Study on Herb based Place Names of Mullaitivu District, Sri Lanka

**Dr. S. Sivashanmugarajah M.D.(s) (India)**
*Senior Lecturer Grade - I, Unit of Siddha Medicine*
*University of Jaffna, Kaithady, Sri Lanka*

**Abstract -** There are many ways to find out the location and diversity of medicinal herbs for documentation. The detail study of herbal place names is one of them. This study was carried out to identify and documentation of herb based place names of Mullaitivu District in the Northern Province of Sri Lanka. The data was collected from field study, interviews, Government publications, books and authentic journals. Among the 632 villages of this district, 183 villages (30%) were related to herbs names. The types of herbs relevant to the place names were 64% trees, 16% shrubs, 10% grasses, 8% creepers and 2% aquatic plants. Details are described in this article.

**Key Words:** Sri Lanka, Tamils, Siddha Medicine, Herbs, Place names, Mullaitivu District, documentation, villages

**References**

1. Sivashanmugarajah S., (2018), Yalpaana Maavattaththil Moolikaipeyarkalil Amainthulla Urpeyarkal, Siddha Medical Development Society, Jaffna
2. Sivashanmugarajah S., (2014), Kilinochchi Maavattaththil Moolikaip Peyarkalil Amainthulla Urpeyarkal, Kilinochchi Maavatta Thonmaiyin Moolankal, District Secretariat Kilinochchi and Cultural Assembly.
3. Sivashanmugarajah S., (2019), Mannar Maavatta Edapeyarkali Moolikai Thavarankalin Selvaakku – Or Aayvu,Shanlax International Journal of Tamil Studies April 2019, Tamil Nadu, India
4. Sivashanmugarajah S (2020) Herbal Place Names in Vavuniya District, Sri Lanka-International Journal of Tamil Language and Literary, January 2020
5. Rasanayakam S. (2003) Yalpana Sarithiram. Asian Educational Services New Delhi, Chennai p1
6. Sivashanmugarajah S. (1997) Suthesa Maruthuva Kaiyakarathy. Siddha Medical Development Society, Jaffna
7. ……..Annual Performance Report and Accounts – (2018). Mullaitivu District
8. ……...District Satistical Hand Book, (2011). Mullaitivu District
9. Lewis J.P. (Tamil edition;) (2012)>Elankaiyin Vanni Maavattankal oru Kaiedu (Vavuniya – Mullaitheevu )>Semamadu Pathippakam (Lewis J.P. (1895), Manual of The Vanni Districts (Vavuniya and Mullaittvu), Colombo.)
10. ………..(1903), Vaidya Malai Akarathi, Chennai
11. Kazhakat Tamizh Akarathi, (1980), The South India Saiva Siddhanta Work Publishing Society, Tinnevelly, Limited.
12. Sivashanmugarajah S., (2012) Dictionary of Medicinal Plants, Siddha Medical Development Society, Jaffna
13. Sampasivampillai T.V., (1931), Tamil English Dictionary Vol.-1, Department of Indian Medicine and Homeopathy Chennai.
14. Tamil Lexicon, (1982), Vol..I, University of Madras
15. Ponnaiah I (Publisher) , (1928), Pararasasekaram Siroroganidhanam, Saivaprakasa Press, Jaffna
16. Sampasivampillai T.V., (1998), Tamil English Dictionary Vol.-4, Part - I, Department of Indian Medicine and Homeopathy, Chennai.

17. Sampasivampillai T.V., (1991), Tamil English Dictionary Vol.-2, Department of Indian Medicine and Homeopathy Chennai.
18. Theventhira Panditar (1958), Pachchilai varkka pasumooli Akarathi, Chennai-1
19. Kugathasan K.S., (2004), Check List of some Plants of Botanical and General Interest – With Brief Descriptions >Field work Centre – Thondaimannaru Jaffna.
20. Mani P.S., (1992), Valam Tharum Marankal, Vol.-4 New Century Book House Ptv.,Chennai
21. Mathaiyan P., Chitraputhran, H., (1986), Maraenap Peyarthokuthi (Vol-1) (Dictionary of Trees and Plants Vol.1), Tamil University, Tanjavur
22. Thilakanayakampol P., (2000), Urum Perum – Valikamam Vadakkil Or Aayvu (Publication of Valikamam North Pradesa Saba)
23. Sampasivampillai T.V., (1994), Tamil English Dictionary Vol.-5, Department of Indian Medicine and Homeopathy Chennai.
24. Murukesa Muthaliyar K.S. (1933) Bala Vakadam, Chennai Government Press
25. Cmaraswamy S.W., (1918), Vadamakanaththu sila Urpeyarkal, Jaffna
26. Ramanathan P., (2008), Siddha Maruthuvaththin Thotramum Valarchium, Thavady, Jaffna.
27. Kathir Thanikasalam, (1992), Thamilar Varalarum Elankai Edapeyaraaivum, Saravana Pathippakam, Chennai.

# இலங்கை முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மூலிகை இடப்பெயர்கள்

***மருத்துவர் சே. சிவசண்முகராஜா (எம்.டி)(சித்தா)(இந்தியா)***
முதுநிலை விரிவுரையாளர் தரம் -1, சித்தமருத்துவப்பிரிவு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கைதடி, இலங்கை

***ஆய்வுச் சுருக்கம்:*** *மூலிகைத்தாவரங்களின் இருப்பிடம், செறிவு போன்றவற்றை அறிந்து ஆவணப்படுத்துவதற்குப் பலமுறைகளுள. அவற்றுள் மூலிகைத்தாவர இடப்பெயர்களைப் பற்றிய விரிவான ஆய்வுமுறையும் ஒன்றாகும். அந்தவகையில் இலங்கையின் வடமாகாணத்திலுள்ள முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மூலிகைத்தாவர இடப்பெயர்களைக் கண்டறிந்து ஆவணப்படுத்தும் நோக்குடன் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கள ஆய்வு நேர்காணல், மற்றும் அரச வெளியீடுகள், நூல்கள், சஞ்சிகைகள் மூலம் ஆய்வுக்கான தகவல்கள் பெறப்பட்டன. இம்மாவட்டத்திலுள்ள 632 கிராமங்களில் 183கிராமங்களின் பெயர்கள் (30 சதவீதமான கிராமங்கள்) மூலிகைத்தாவரங்களுடன் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. அவற்றுள் 64மூ மரங்களாகவும், 16% புண்டுகள்,செடிகளாகவும், 10% புற்களாகவும், 8% கொடிவகையாகவும், 2% நீர்த்தாவரங்களாகவும் காணப்படுகின்றன.அவை பற்றிய விபரங்களை இக்கட்டுரை விபரிக்கின்றது.*

***திறவுச் சொற்கள்:*** *இலங்கை, ஈழத்தமிழர், சித்த மருத்துவம், மூலிகைத்தாவரம், இடப்பெயராய்வு, முல்லைத்தீவு மாவட்டம், ஆவணப்படுத்தல்.*

## அறிமுகம்

இடப்பெயராய்வில் மூலிகைத் தாவர இடப்பெயர்கள் பற்றிய ஆய்வானது மூலிகை மருத்துவர்கள், தாவரவியலாளர்கள், மற்றும் இத்துறை சார்ந்தவர்களுக்கு பயனுள்ளதாக விளங்குகிறது. ஓரிடத்தில் காணப்பட்ட அல்லது காணப்படக்கூடிய மூலிகை அல்லது மூலிகைகள் பற்றி அறிந்துகொள்ளவும், மூலிகைகளை அடையாளங்கண்டு கொள்ளவும், மூலிகைகளின் பரம்பல், பயன்பாடு போன்ற பலவிடயங்களைப் பற்றியும் அறிந்துகொள்ளவும் மூலிகைத் தாவர இடப்பெயராய்வுகள் ஒருவகையில் உதவியாகவுள்ளன. இடப்பெயராய்வுகளை மேற்கொண்ட அறிஞர்களிற் பலரும் ஆங்காங்கே மூலிகை இடப் பெயர்களைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளபோதிலும் அவை முழுமையானவை என்று கூறமுடியாதுள்ளது. ஆயினும் இலங்கையின் வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாண மாவட்டம்[1], கிளிநொச்சி மாவட்டம்[2], மன்னார் மாவட்டம்[3], வவுனியா மாவட்டம்[4] ஆகிய நான்கு மாவட்டங்களிலுமுள்ள மூலிகைத் தாவரங்கள் பற்றிய ஆய்வுகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வடமாகாணத்திலுள்ள முல்லைத் தீவு மாவட்டத்திலுள்ள மூலிகை இடப்பெயர்கள் என்ற இவ்வாய்வு அமைந்துள்ளது.

## ஆய்வின் நோக்கம்

இலங்கை, முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மூலிகைத் தாவர இடப் பெயர்களைக் கண்டறிந்து ஆவணப்படுத்துதல்.

### ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது களஆய்வு, இலக்கிய ஆய்வு என்பவற்றைச் சார்ந்ததாக அமைந்துள்ளது. ஆய்வுக்குரிய தகவல்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகப் புள்ளிவிபர அறிக்கை மற்றும் பதிவேடுகள், நூல்கள், வெளியீடுகள், களஆய்வு, நேர்காணல், கணினிப் பதிவுத்தகவல்கள் என்பவற்றிலிருந்து பெறப்பட்டவையாகும்.

### ஆய்வுப்பிரதேசம்

முல்லைத்தீவு மாவட்டமானது இலங்கையில் அமைந்துள்ள இருபத்தைந்து மாவட்டங்களில் ஒன்றாகும். அது இலங்கையின் வட கிழக்குப்புறமாக, இலங்கையின் வட மாகாணத்தில் அமைந்துள்ளது. வடமா காணமானது யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு என்னும் ஐந்து மாவட்டங்களைத் தன்னகத்தே அடக்கியுள்ளது. முல்லைத்தீவு மாவட்டமானது 2617 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டது. 2012 ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெ டுப்பின்படி 91,947 சனத்தொகையைக் கொண்டுள்ளது. இம்மாவட்டத்தின் எல்லைகளாக வடக்கில் கிளிநொச்சி மாவட்டமும், தெற்கில் திருகோணமலை மாவட்டம், வவுனியா மாவட்டம், மன்னார் மாவட்டத்தின் ஒருபகுதியும், மேற்கில் மன்னார் மாவட்டமும், கிழக்கில் வங்காள விரிகுடாக்கடலும் அமைந்துள்ளன. வன்னிராச்சியத்தின் கடைசித் தமிழ் மன்னனான பண்டார வன்னியன் 1803 ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்படும்வரை செங்கோலேச்சிய பெருமைக்குரிய மாவட்டமாகவும் இது விளங்குகின்றது. இலங்கையின் உள்நாட்டுப் போரினால் (1985 - 2009) மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டமாகவும் இது விளங்குகிறது. யுத்தங்காரணமாக இம் மாவட்டத்தின் இயற்கை வளங்கள் பெருமளவில் அழிவடைந்துள்ளது இம்மாவட்டத்தைச் சேர்ந்த மக்களிற் பலர் இலங்கையின் பிற பகுதிகளுக்கும், வெளிநாடுகளுக்கும் இடம்பெயர்ந் துள் ளார்கள். தற்போதும் மீளக்குடியேற்றம் இங்கு நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு மாவட்டமானது பெருமளவில் காடுகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. எனவே, இம்மாவட்டமானது இயற்கையாகவே மூலிகைத் தாவர வளம் மிக்கதாக விளங்குகின்றது. இம்மாவட்டத்தின் இடப்பெயர்களிற் பல மூலிகைத் தாவரங்களுடன் தொடர்புடையனவாக அமைந்துள்ளன. இம்மாவட்டத்தின் பெயரே மூலிகைத் தாவரமான முல்லை காரணமாக அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும். பண்டைக்காலத்தில் இலங்கையின் வடபகுதி இருதீவுகளாக இருந்தது என்றும் அதில் ஒன்று எருமைமுல்லைத்தீவு என்று அழைக்கப்பட்டதாகவும் யாழ்ப்பாணச் சரித்திரம் கூறுகிறது[5]. அவ்வெருமை முல்லைத்தீவின் ஒரு பகுதியே தற்போதைய முல்லைத்தீவாக இருத்தல் வேண்டும். முல்லையில் கொடிமுல்லை, மரமுல்லை (கறிமுல்லை) என்று இருவகையுண்டு. அவற்றுள் மரமுல்லையானது எருமைமுல்லை, பசுமுல்லை என இருவகைத்து. இவ்விரு மரமுல்லைகளும் உணவாகவும் மருந்தாகவும் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக மரமுல்லை வேர் சித்தமருத்துவத்தில் தசமூலம் எனவழைக்கப்படும் பத்து வகையான மூலிகை வேர் களாலான கூட்டு மருந்துச்சரக்கில் ஒன்றாக இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது[6]. முல்லைத்தீவு மாவட்டத்தின் பலபகுதிகளிலும் பரவலாக எருமை முல்லையானது வளர்ந்திருப்பதைத் தற்போதும் காணக்கூடியதாகவுள்ளது. இம்மாவட்டமானது நிர்வாகரீதியாக ஆறு பிரதேச செயலர் பிரிவுகளாகவும், அறுநூற்று முப்பத்திரண்டு கிராமங்களை உள்ளடக்கிய நூற்று முப்பத்தாறு கிராம சேவகர் பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது 7,8. அவற்றை அட்டவணை - 1 எடுத்துக் காட்டுகிறது

அட்டவணை - 1 கிராம நிர்வாகப்பிரிவு

| இல | பிரதேச செயலர் பிரிவு | கிராம சேவகர் பிரிவுகளின் (கி.சே. பிரிவு) எண்ணிக்கை | கிராமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கரைதுறைப்பற்று (மரிறைம்பட்டு) | 46 | 219 |
| 2 | புதுக்குடியிருப்பு | 19 | 179 |
| 3 | ஒட்டுசுட்டான் | 27 | 114 |
| 4 | துணுக்காய் | 20 | 35 |
| 5 | மாந்தை கிழக்கு | 15 | 68 |
| 6 | வெலிஓயா | 09 | 17 |
| மொத்தம் | | 136 | 632 |

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 632 கிராமங்களில் 183 கிராமப்பெயர்கள் மூலிகைத்தாவரப் பெயர்களுடன் தொடர்புடையதாக அமைந்திருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. அதாவது ஏறத்தாள 30 சதவீதமான கிராமங்கள் மூலிகைத்தாவரப் பெயர்களுடன் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன.

பொதுவாக மூலிகைத் தாவரங்களை மரங்கள், செடிகள், கொடிகள், புற்கள், நீர்த்தாவரங்கள் என்று வகைப்படுத்தி நோக்குவது வழக்கம். அந்தவகையில் இம்மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் மூலிகைத்தாவரங்களுடன் தொடர்புடையதாகக் காணப்படும் இடப்பெயர்களை அட்டவணை - 2 எடுத்துக்காட்டுகிறது.

அட்டவணை - 2 மூலிகைத்தாவரவகை

| இல. | மூலிகைத்தாவர வகை | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|---|
| 1 | மரங்கள் | 118 | 64 |
| 2 | செடிகள், புண்டுகள் | 30 | 16 |
| 3 | புல்வகை | 19 | 10 |
| 4 | கொடிகள் | 12 | 08 |
| 5 | நீர்த்தாவரங்கள் | 04 | 02 |
| மொத்தம் | | 183 | 100 |

இவைபற்றி இனி விரிவாக நோக்குவாம். இம்மாவட்டத்தில் மூலிகைத்தாவர இடப் பெயர்களில் 48 வகையைச் சேர்ந்த 118 மூலிகைத்தாவர இடப்பெயர்கள் அடையாளங் காணப்பட்டன. அவற்றின் விபரங்களை அவை காணப்படும் கிராம சேவகர் பிரிவுகளுடன் அட்டவணை - 3 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை - 3 மரவகைப் பெயர்கள்**

| இல | மரப்பெயர் | தொடர்புடைய கிராமப் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | மாமரம் | மாமூலை(கி.சே.பிரிவு 110)<br>அம்பகாமம் (கி.சே.பிரிவு 72)<br>கொக்கிளாய் (கி.சே. பிரிவு 77, 78)<br>கொக்குத்தொடுவாய் (கி.சே.பிரிவு 80,81,82)<br>கொக்காவில் (கி.சே.பிரிவு 75)<br>மாங்குளம் (கி.சே.பிரிவு 73) | 06 |
| 2 | அளம்பில் | அளம்பில் (கிசே.பிரிவு 86,87) | 01 |
| 3 | குமிழமரம் | குமிழமுனை(கி.சே.பிரிவு 119,121,122)<br>குமிழங்குளம் (கிசே.பிரிவு 01)<br>குமிழடிக்குளம் (கி.சே.பிரிவு 15) | 03 |
| 4 | தேன்தூக்கி | தேன்தூக்கி | 01 |
| 5 | கொன்றை (கொண்டல்) | கொண்டைமடு(கி.சே.பிரிவு 102)<br>கொண்டைமடு (கி.சே.பிரிவு 36)<br>கொண்டல்புலவு (கி.சே.பிரிவு 36) | 03 |
| 6 | மாவிலங்கை | மாவிலங்கேணி (கிசே.பிரிவு 40) | 01 |
| 7 | மகிழமரம் | மகிழங்குளம் (கி.சே.பிரிவு 127) | 01 |
| 8 | தேரிமரம் | தேராவில் (கி.சே.பிரிவு 47, 52)<br>தேராங்கண்டல் (கி.சே.பிரிவு 27) | 02 |
| 9 | பாலை | இரணைப்பாலை (கி.சே.பிரிவு 43)<br>பாலைப்பாணி(கி.சே.பிரிவு 01) | 02 |
| 10 | வேம்பு | வேப்பங்குளம் (கி.சே.பிரிவு 81)<br>வேப்பங்குளம் (கி.சே.பிரிவு 126)<br>கோம்பவில் கி.சே.பிரிவு 42) | 03 |
| 11 | முருக்கு (முள்முருக்கு) | முருக்கு வெட்டுவான் (கி.சே.பிரிவு 54)<br>முருக்கு வெட்டுவான் (கி.சே.பிரிவு 36) | 02 |
| 12 | வேலமரம் | வேலங்கண்டல் (கி.சே.பிரிவு )<br>வேலங்குளம் (கி.சே.பிரிவு 72)<br>கருவேலங்கண்டல் (கி.சே.பிரிவு 66) | 03 |
| 13 | ஆலமரம் | ஆலங்குளம் (கி,சே.பிரிவு 26)<br>ஆலங்குளம் (கி.சே.பிரிவு 82)<br>ஆலடிக்குளம் (கி.சே.பிரிவு121)<br>ஆலடிக்குளம் (கி.சே.பிரிவு 70)<br>பிராமணாலங்குளம்(கி.சே.பிரிவு 62)<br>ஆலவெட்டுவான்குளம் (கி.சே.பிரிவு 72) | 06 |

| | | | |
|---|---|---|---|
| 14 | குருந்தமரம் | குருந்தன்குளம் (கி.சே.பிரிவு )<br>குருந்தைக்காடு (கி.சே.பிரிவு 79)<br>குருந்தூர்க்குளம் (கி.சே.பிரிவு 120) | 03 |
| 15 | பனிச்சை மரம் | பனிக்கங்குளம் (கி.சே.பிரிவு 74)<br>பனிச்சங்கேணி(கி.சே.பிரிவு 78) | 02 |
| 16 | காயாமரம் | காயாமோட்டை (கி.சே.பிரிவு 43)<br>காயாமோட்டை (கி.சே.பிரிவு 54)<br>காயாமோட்டை (கி.சே.பிரிவு 100)<br>காயாவெளி (கி.சே.பிரிவு) | 04 |
| 17 | புளியமரம் | பெரியபுளியங்குளம் (கி.சே.பிரிவு 70)<br>பெரியபுளியங்குளம் (கி.சே.பிரிவு107)<br>புளியங்குளம் (கி.சே.பிரிவு 67)<br>புளியங்குளம் (கி.சே.பிரிவு 11)<br>புளியங்குளம் (கி.சே.பிரிவு 38)<br>புளியமுனை (கி.சே.பிரிவு 77) | 06 |
| 18 | தம்பனை மரம் | தம்பனைக்குளம் (கி.சே.பிரிவு ) | 01 |
| 19 | நாவிமரம் | நாவிக்குளம் (கி.சே.பிரிவு 74) | 01 |
| 20 | இலந்தை | இலந்தைமுனை (கி.சே.பிரிவு 77)<br>கோடாலிக்கல்லு (கி.சே.பிரிவு 126) | 02 |
| 21 | மருதமரம் | மருதம்புவல் (கி.சே.பிரிவு 36)<br>இளமருதங்குளம் (கி.சே.பிரிவு11)<br>மருதங்குளம் (கி.சே.பிரிவு 23)<br>மருதடி (கி.சே.பிரிவு 39)<br>மருதமடு (கி.சே.பிரிவு 41)<br>மருதடிவெளி (கி.சே.பிரிவு 43)<br>மருதமடு (கி.சே.பிரிவு 122)<br>மருதநகர் (கி.சே.பிரிவு 36) | 08 |
| 22 | அணிஞ்சில் | அணிச்சியன்குளம் (கி.சே.பிரிவு31) | 01 |
| 23 | தில்லைமரம் | தில்லையம்பலப் பிள்ளையார் கோவிலடி (கி.சே.பிரிவு 80) | 01 |
| 24 | கயட்டை மரம் | கயட்டைக்காடு (கி.சே.பிரிவு124)<br>கயட்டிக்குளம் (கி.சே.பிரிவு 81) | 02 |
| 25 | ஆத்தி | ஆத்திமோட்டை(கி.சே.பிரிவு 43) | 01 |
| 26 | வீழி மரம் | பழன்வீழி (கி.சே.பிரிவு 71) | 01 |
| 27 | வம்மி மரம் | வம்மில் (கி.சே.பிரிவு ) | 01 |

| | | | |
|---|---|---|---|
| 28 | விளாத்தி | விளாத்திக்குளம் (கி.சே.பிரிவு 65)<br>கல்விளான் (கி.சே.பிரிவு )<br>விளாங்கண்டல் (கி.சே.பிரிவு 36)<br>வன்னி விளாங்குளம்(கி.சே.பிரிவு 01)<br>கொல்ல விளாங்குளம்(கி.சே.பிரிவு3)<br>விளாத்தி வெட்டுவான்(கி.சே.பிரிவு40)<br>விளாத்திமோட்டை(கி.சே.பிரிவு 43)<br>விளாத்திக்குளம் (கி.சே.பிரிவு 74)<br>விளாத்திமோட்டை (கி.சே.பிரிவு100) | 09 |
| 29 | சாளம்பன் | சாளம்பன் (கி.சே.பிரிவு 96)<br>சாளம்பன் குளம் (கி.சே.பிரிவு 11)<br>சின்னச்சாளம்பன் (கி.சே.பிரிவு 61)<br>பெரிய சாளம்பன் (கி.சே.பிரிவு 63) | 04 |
| 30 | நொச்சி | நாச்சிக்குடா (கி.சே.பிரிவு 49)<br>நொச்சிமோட்டைக் கண்டல்<br>(கி.சே.பிரிவு 82) | 02 |
| 31 | புவரசு | புவரசன்குளம்கி.சே.பிரிவு 8) | 01 |
| 32 | நெல்லி | நெல்லிமோட்டை (கி.சே.பிரிவு 100) | 01 |
| 33 | நாவல் | கருநாவல்குளம்<br>நாவற்குளம் (கி.சே.பிரிவு 1)<br>நாவலடி வெளி (கி.சே.பிரிவு 43)<br>நாவலடியாறு (கி.சே.பிரிவு 43)<br>நாவற்குளம் (கி.சே.பிரிவு 81)<br>நாவற்கேணி (கி.சே.பிரிவு 83)<br>நாவற்காடு (கி.சே.பிரிவு 104) | 07 |
| 34 | வெட்பாலை | வற்றாப்பளை (கி.சே.பிரிவு 101) | 01 |
| 35 | கண்டல் | தேராங்கண்டல் (கி.சே.பிரிவு 27)<br>கருவேலங்கண்டல் (கி.சே.பிரிவு)<br>மன்னாகண்டல் (கி.சே.பிரிவு 54)<br>நட்டாங் கண்டல்( கி.சே.பிரிவு 12)<br>சிறுகண்டல் (கி.சே.பிரிவு 82)<br>நொச்சிமோட்டைக் கண்டல்<br>(கி.சே.பிரிவு 82) | 06 |
| 36 | உயில் | உயிலங்குளம் (கி.சே.பிரிவு 18) | 01 |
| 37 | இத்தி | சின்ன-இத்திமடு (கி.சே.பிரிவு 126)<br>இத்திக்காடு (கி.சே.பிரிவு)<br>பெரிய - இத்திமடு(கி.சே.பிரிவு126) | 03 |
| 38 | புரசு | புரசன்குளம் (கி.சே.பிரிவு 68) | 01 |

| | | | |
|---|---|---|---|
| 39 | கூழா | கூழாமுறிப்பு (கி.சே.பிரிவு 68)<br>கூழாமோட்டை (கி.சே.பிரிவு 111) | 02 |
| 40 | உவாய் | உவாயடி வாய்க்கால் (கி.சே.பிரிவு 40) | 01 |
| 41 | மருக்காரை | மருக்காரமோட்டை (கி.சே.பிரிவு 61) | 01 |
| 42 | எட்டி | எட்டிமுறிச்சான் (கி.சே.பிரிவு 124)<br>மானுருவி (கி.சே.பிரிவு 66) | 02 |
| 43 | ஒதியமரம் | ஒதியமலை (கி.சே.பிரிவு 123)<br>கரிய ஒதியமலை (கி.சே.பிரிவு 125) | 02 |
| 44 | கருவேம்பு | பெரிய கருவேப்பமுறிப்பு (கி.சே.பிரிவு 59) | 01 |
| 45 | சமண்டலை | கதலியார் சம்மளங்குளம்( கி.சே.பிரிவு 62) | 01 |
| 46 | உளுவிந்தம் | உளுவானேரி (கி.சே.பிரிவு 12) | 01 |
| 47 | எருமை முல்லை | முல்லைத்தீவு (கி.சே.பிரிவு 93, 97)<br>முல்லைத்தீவன்மோட்டை (கி.சே.ாபிரிவு 44) | 02 |
| 48 | கூமா | கூமாக்குளம் (கி.சே.பிரிவு) | 01 |
| மொத்தம் | | | 118 |

மாமரமானது முல்லைத்தீவு மாவட்டத்தில் பல இடங்களிலும் முற்காலத்தில் காணப்பட்டுள்ளமைக்குச் சான்றுகளுள. ஒட்டுசுட்டானுக்கும், அன்னதேவன் மடுவிற்கும் இடையில் அழகான மாமர இனம் ஒன்று இருந்ததாகக் குறிப்பிடும் ஜே.பி.லூயிஸ் அவர்கள் 1851 ஆம் ஆண்டு அதன் சுற்றளவு நிலத்திலிருந்து 4 அடி உயரத்தில் 13 அடியாகவும், 1890 இல் 15 அடியாகவும் இருந்ததாகவும், கைவிடப்பட்ட கிராம எல்லையில் அது காணப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளமை கவனத்திற் கொள்ளத்தக்கது.[9] கொக்கு என்பதும் மாமரத்தைக் குறிக்கும்[10], [11] அம்ப என்ற சிங்களப் பெயரும் மாமரத்தைக் குறிப்பதாகும்[12]. (கொழும்பு என்பது கொள(இலை) - அம்ப(மா) என்று மாவிலைகள் காரணமாக ஏற்பட்டதென்ற கருத்தும் உள்ளது)

அளம்பில் அல்லது அலம்பில் என்பது மலையாளத்தில் சாதாரணமாகக் காணப்படும் ஒரு மரமாகும்[13,14]. புக்கள் வெண்ணிறம். பழம்உண்ணத்தக்கது. அளம், அளர்என்றால் உப்பு, உவர்ப்பு. எனவே, உவர்நிலத்தில் வளர்தல் பற்றி அளம்பில் என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம். தேன்தூக்கி மரத்தின் இலை புறங்கைநாறி என்னும் மரத்தின் இலையைப் பெரிதும் ஒத்துள்ளது என்றும், புறங்கைநாறி இலையைக் கசக்கி உள்ளங்கையில் தேய்த்தால், புறங்கை மணக்கும் என்றும் ஆனால் தேன்தூக்கி இலையை அவ்விதம் தேய்த்தால் புறங்கை மணக்காது என்றும் மூத்த பரம்பரை வைத்தியர் அ.நாகமணி அவர்கள் தமது அனுபவத்தை எடுத்துக்கூறியுள்ளார். தேன்தூக்கிமரம் முல்லைவத்தீவு மாவட்டத்தில் பரவலாகக் காணப்படுவதுபற்றி லூயிஸ் அவர்களும் பதிவு செய்துள்ளார்.[15] அவ்விதமே தேராவில், தேராங்கண்டல் ஆகிய இடப்பெயர்கள் தேரிமரங்காரணமாக ஏற்பட்டவை

என்றும் நாகமணி தகவல் தந்துள்ளார். தேரியிலையை அரைத்து அரணைக்கடி விடத்துக்குக் கொடுப்பது வழக்கம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொன்றை மரமானது கொண்டல் என்றே சாதாரண மக்களால் அழைக்கப்படுகிறது. முல்லைத்தீவு மாவட்டத்தில் பாலை மரங்களும் அதிகம் உள்ளது. அதன்காரணமாக ஏற்பட்டதே இரணைப்பாலை, பாலைப் பாணி என்ற இடப்பெயர்களாகும். புதுக்கு டியிருப்பில் பாலையடிப்பிட்டி என்னும் ஓரிடமும் உள்ளது. இம்மாவட்டத்தில் பாலைப்பழங்கள் அதிகம் கிடைப்பதால் அவற்றிலிருந்து பாணிகாய்ச்சி, நீண்டநாள் வைத்திருந்து உணவாகப் பயன்படுத்தும் வழக்கமும் முற்காலத்திலிருந்து தற்காலம் வரை காணப்படுகிறது. அதுகாரணமாக ஏற்பட்ட இடப்பெயராகப் பாலைப் பாணி அமைந்துள்ளது.

கொஹொம்ப என்பது வேப்பமரத்தைக் குறிக்கும் சிங்களப் பெயராகும்[16]. அந்தவகையில் கோம்பவில் என்னும் இடம் அமைந்துள்ளது. இலங்கையின் வடபகுதியில் சுனாமி ஆழிப்பேரலையின் பின்னர் அழிவடைந்து வரும் தாவரங்களில் முள்முருக்கமரமும் ஒன்றாகும். முருக்கிலைச்சாற்று எண்ணெய் போன்ற மருந்துகளுக்கு இதன் இலைச்சாறு சேர்க்கப்படுகிறது[17]. முருக்கு வெட்டுவான் என்ற பெயரில் இரண்டு இடங்கள் இம்மாவட்டத்தில் காணப்படுகின்றன. அவ்விதமே பிரம்பு காரணமாக ஏற்பட்ட இடமாகப் பிரப்பு வெட்டுவான் என்னும் இடமும், ஆலமரங்காரணமாக ஆல வெட்டுவான் என்னும் இடமும் அமைந்து ள்ளன. தம்பனை என்பதும் மரவகையைச் சேர்ந்தது[18]. இது தமனமரம் என்றும் அழைக்கப்படுகிறது[19]. தம்பனைக்குளம் அது காரணமாக ஏற்பட்ட இடப்பெயராக அமைந்துள்ளது. இலந்தையைக் குறிக்கும் இடப்பெயர்களில் ஒன்றாகக் கோடாலிக் கல்லு என்பதும் இமைந்துள்ளது. கோடாலி என்பதற்கு இலந்தை, கட்டுக்கொடி, கோடாலிமரம் என்னும் பெயர்களும் உள[20]. தில்லைமரத்துடன் தொடர்பான இடப்பெயர்களில் அம்பலவன் பொக் கணையும் ஒன்றாகும். அம்பலவிருக்கம் என்பது தில்லையைக் குறிக்கும்[21].

வம்மி மரமானது ஈர, உலர் வலயங்களில் காணப்படும் பெரிய மரம். இது நீர் நிலைகளுக்கு அருகாமையில் வளரும் ஒரு பெரிய மரமாகும்[22]. வம்மியடி என்ற பெயரில் மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளிப் பிரதேச செயலர் பிரிவில் ஓரிடமும், களுவாஞ்சிக்குடிப் பிரதேச செயலர் பிரிவில் ஓரிடமும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

சாளம்பை என்பதற்குக் கடம்பு, நீர்க்கடம்பு, சிறுகடம்பு என்ற பெயர்கள் தமிழ் மருத்துவ அகராதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.[23]. இம்மரத்துடன் தொடர்புடையதாக நான்கு இடங்கள் உள்ளன. நாச்சிக்குடா என்பது நொச்சிமரங்காரணமாக ஏற்பட்ட ஒன்றாகக் கருதப்படுகிறது. நொச்சிக்குடா என்பதே நாச்சிக்குடாவாகத் திரிபடைந் திருத்தல் வேண்டும். வத்தகம் என்பதற்கு வெட்பாலை என்றும் பொருளுண்டு[24,25]. அந்தவகையில் வத்தகப்பாலை என்பது வத்தகப்பளையாக மருவித் தற்காலத்தில் வற்றாப்பளை என்று அழைக்கப்படுவதாகக் கருதமுடிகிறது. இவ்விடத்தில் பாலை மரங்கள் அதிகம். சில ஆய்வாளர்கள் வத்தகப்பழம் என்பதன் திரிபாக வற்றாப்பளை என்ற பெயர் ஏற்பட்டி ருக்கலாம் என்று கருதுகின்றனர்[26]. அது அவ்வளவு பொருத்தமுடையதாகத் தெரியவில்லை. இவ்விடத்தில்சாதாரணபாலை மரங்களை அதிகளவில் காணக்கூடிய தாகவுள்ளது. அந்தவகையில் மருத்துவத்தில் இடம்பெறும் வெட்பாலைவகையும் இவ்விடத்தில் இருந்திருக்க வாய்ப்புகளுண்டு.

புரசு என்பது பலாசைக் குறிக்கும்[27]. புரசங்குளமானது பலாசமரங்காரணமாக ஏற்பட்ட இடப்பெயராகும். எட்டிமுறிச் சான் என்பது எட்டிமரங்காரணமாக ஏற்பட்ட ஓரிடப்பெயராகும். இம்மாவட்டத்தில் எட்டிமரங்களையும் அதிகம் காணக்கூடியதாகவுள்ளது. எட்டிமரத்துக்கு மான்றூதி என்றும் ஒரு பெயருண்டு[28]. இம்மாவட்டத்திலுள்ள மானுருவி என்ற இடப்பெயர் மான்றூதியிலிருந்து திரிபடைந்திருக்கலாம் என்றும் பரம்பரை வைத்தியர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். எட்டிமரத்துக்குக் காஞ்சிரம், காஞ்சுரை என்ற பெயர்களும் உண்டு[29]. காஞ்சூரமோட்டை என்ற பெயரில் இரு இடங்கள் இம்மாவட்டத்திலுள்ளன. ஆனால் கருஞ்சூரை என்ற முட்கொடிவகையும் இம்மாவட்டத்தில் சிறப்பாகக் காணப்படுகின்றன[30]. அவற்றைப் பரம்பரை வைத்தியரான மணிகண்டன் அவர்கள் எமக்கு அடையாளங் காட்டியுள்ளார். காஞ்சூரமோட்டை என்பது கருஞ்சூரையின் திரிபாக ஏற்பட்டிருப்பதற்கான வாய்ப்பே அதிகமுள்ளதால் அவ்விடப்பெயரைக் கொடிவகையுள் அடக்கியுள்ளோம்.

சமண்டலை மரமானது சம்மளை என்று உள்ர் மக்களால் அழைக்கப்படுகிறது. காதலியார் சம்மளங்குளம் என்பது சமண்டலை காரணமாக ஏற்பட்ட இடப்பெயராகும். உலுவிந்தை அல்லது உளுவிந்தமரங்காரணமாக ஏற்பட்ட இடப்பெயர் உளுவானேரியாகும். பாலைப்பாணி, இலுப்பைப்பாணி போல உளுவிந்தம் பழப்பாணியும் இம்மாவட்ட மக்களின் விசேட உணவுகளில் ஒன்றாக உள்ளது. கயட்டைக்காடு, இத்திக்காடு போன்ற பெயர்கள் அவ்விடங்களில் முற்காலத்தில் இம்மரங்கள் செறிந்து காணப்பட்டமைக்குச் சான்றாகவுள்ளது. லூயிஸ் நாகமரங்கள் செறிந்து காணப்பட்ட நாகச்சோலை என்னும் ஓரிடத்தைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அம்மரங்கள் வடமாகாணத்தில் முல்லைத்தீவுப்பகுதியில் மட்டுமே காணப்பட்டதாக அவர் பதிவு செய்துள்ளார்[31]. இவ்விடத்தில் தற்போதும் நாகமரங்கள் கணிசமான அளவில் காணப்படுகின்றன. (குறிப்பு - இடப்பெயர்களில் வெளிப்படையாகக் காணப்படும் மரங்கள் பற்றி எடுத்துரைப்பது இக்கட்டுரையின் விரிவஞ்சித் தவிர்க்கப்பட்டுள்ளது).

**அட்டவணை - 4 பூண்டுகள், செடிகள்**

| இல. | செடி, பூண்டுப்பெயர் | கிராமம் | தொகை |
|---|---|---|---|
| 1 | முள்ளி | முள்ளிவாய்க்கால்(கி.சே.பிரிவு 98இ99இ103இ104)<br>முள்ளியவளை (கி.சே.பிரிவு 103,104)<br>முள்ளிவயல் (கி.சே.பிரிவு 39) | 03 |
| 2 | வட்டுக்கத்தரி | வட்டுவாகல் (கி.சே.பிரிவு98) | 01 |
| 3 | துவரை | துவரங்கரை (கி.சே.பிரிவு )<br>துவரங்குளம் (கி.சே.பிரிவு11)<br>துவரைமோட்டை (கி.சே.பிரிவு67) | 03 |
| 4 | இசங்கு | இயங்கன் குளம் (கி.சே.பிரிவு 69)<br>இயங்கன் குளம் (கி.சே.பிரிவு 34)<br>இயங்கன் வெளி(கி.சே.பிரிவு39) | 03 |

| | | | |
|---|---|---|---|
| 5 | தொட்டாற்சுருங்கி | *சுண்டிக்குளம் (கி.சே.பிரிவு 49)* | ***01*** |
| 6 | பழம்பாசி | *பழம்பாசி (கி.சே.பிரிவு 127)* | ***01*** |
| 7 | ஈஞ்சு | *குரவில் (கி.சே.பிரிவு 47)*<br>*ஈச்சம்பிலவு (கி.சே.பிரிவு 39)* | ***02*** |
| 8 | கரம்பை | *கரம்பைக்குளம் (கி.சே.பிரிவு 1)*<br>*கரம்பைக்குளம் (கி.சே.பிரிவு 27)*<br>*கரம்பைக் குளம் (கி.சே.பிரிவு 56)*<br>*கரம்பைக்காடு (கி.சே.பிரிவு 62)* | ***04*** |
| 9 | கரிசாலை | *கரியல்வயல் (கி.சே.பிரிவு48)* | ***01*** |
| 10 | விராலி | *விராலி (கி.சே.பிரிவு 89)* | ***01*** |
| 11 | ஆவாரை | *செம்மலை (கி.சே.பிரிவு 83)* | ***01*** |
| 12 | கற்றாளை | *குமரிக்குளம் (கி.சே.பிரிவு 10)* | ***01*** |
| 13 | கள்ளி | *கள்ளியடி (கி.சே.பிரிவு36)* | ***01*** |
| 14 | தாழை | *தாழையடி (கி.சே.பிரிவு 105)* | ***01*** |
| 15 | நஞ்சுண்டான் | *நஞ்சுண்டாவெளி (கி.சே.பிரிவு 52)* | ***01*** |
| 16 | அவுரி | *நீலிமடு (கி.சே.பிரிவு 46)* | ***01*** |
| 17 | காவிளை | *மந்துவில் (கி.சே.பிரிவு 38)* | ***01*** |
| 18 | குப்பிளாய் | *குப்பிளான் (கி.சே.பிரிவு 46)* | ***01*** |
| 19 | புல்லாந்தி | *புல்லாந்திக்கேணி(கி.சே.பிரிவு 82)* | ***01*** |
| 20 | எருக்கலை | *எருவில் (கி.சே.பிரிவு 12)* | ***01*** |
| மொத்தம் | | | ***30*** |

இம்மாவட்டத்திலுள்ள இடப்பெயர்களில் பூண்டுகள், செடிகளுடன் தொடர்பு பட்டதாக இருபது வகை நேர்ந்த முப்பது மூலிகைத் தாவரங்கள் காணப்படுகின்றன. *(அட்டவணை -4)* முள்ளிவாய்க்காலானது கரையா முள்ளிவாய்க்கால்,வெள்ளாள முள்ளிவாய்க்கால் என்ற பெயர்கள்[32] முற்காலத்தில் சாதியடிப்படையில் இருந்ததாகக் கூறப்பட்டாலும் தற்போது முள்ளிவாய்க்கால் என்ற பெயரே உள்ளது. முள்ளியில் நீர்முள்ளி, கடல்முள்ளி, கறிமுள்ளி, எழுமுள்ளி, அடுகுகுமுள்ளி, ஆற்றுமுள்ளி, கழுதைமுள்ளி, செம்முள்ளி என்ற பேதங்களுண்டு[33]. கடற்கரையை அடுத்துள்ள ஊர்ப்பெயர்கள் பெரும் பாலும் கடல்முள்ளியை வைத்தே பெயரிடப்பட்டிருத்தல் வேண்டும்.

வட்டு என்பது வட்டுக்கத்தரியைக் குறிக்கும்[34]. வவுனியா மாவட்டத்தில் முல்லைக்கல்லு, பாலைக்கல்லு, வேரல்கல்லு, தோணிக்கல்லு என்று கல்லுடன் தொடர்பாக வரும் ஊர்ப்பெயர்கள் தாவரப்பெயருடன் இணைந்தவையாக இருத்தலினால் வட்டுவாகல் என்ற பெயரும் தாவரப் பெயருடன் இணைந்ததாக இருத்தல் ஏற்புடையதே[35].

துவரஞ்செடியைக் குறிக்கும் மூன்று இடப்பெயர்கள் உள்ளன. இத்துவரஞ் செடிகள் காட்டுத்துவரஞ் செடிகளாகும். இவற்றுள் சிறுதுவரை, பெருந்துவரை என்ற பேதங்களும் உள்ளன. சுண்டி, சுண்டில், தொட்டால்வாடி என்பன தொட்டாற்சுருங்கியைக் குறிப்பனவாகும்[36,37]. சுண்டிக்குளம் என்பது தொட்டாற்சுருங்கி

காரணமாக ஏற்பட்ட இடப்பெயராகும். சுண்டி என்பதற்கு நீர்ச்சுண்டி, வரட்சுண்டி, சுண்டிக்கீரை, சுண்டை, சுக்கு என்னும் பொருள்களும் உள. நீர்ச்சுண்டி என்பது நீரில் காணப்படும் தொட்டால்வாடி. வரட்சுண்டி என்பது வரள் நிலத்தில் காணப்படும் தொட்டால் வாடியாகும்.

குழந்தை மருத்துவத்தில் பழம்பாசி முக்கியமான மூலிகைச்பூண்டாகும்[38]. அதன் பெயரில் பழம்பாசி என்ற ஊர்ப்பெயர் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். குரவம், குரவிகம் என்பன ஈஞ்சு அல்லது ஈச்சைச் செடியைக் குறிக்கும்[39]. அந்தவகையில் குரவில் என்ற இடம் ஈஞ்சுடன் சம்பந்தப்பட்டதாகக் காணப்படுகிறது.

கரம்பைச் செடிகாரணமாக நான்கு இடப்பெயர்களுள. கரம்பை என்பதற்குச் சிறுகளா என்றும் பெயருண்டு[40]. கரியல், கரிசாலை என்பனகையான்தகரையைக் குறிப்பன[41]. உணவாகவும், மருந்தாகவும் பயன்படும் கரிசாலையில் சாதாரண கரிசாலை, பொற்றலைக்கையான்தகரை என்ற பேதங்களுள. கரியல்வயல் என்பது கரிசாலை காரணமாக ஏற்பட்டிருத்தல் தகும்.

இம்மாவட்டத்தில் செம்மலை என்ற ஓரிடமுள்ளது. ஆவாரஞ்செடிக்குச் செம்மலை என்ற பெயரும் உள்ளது[42]. இவ்விடத்தில் ஆவாரஞ்செடிகள் அதிகளவில் இருந்ததாக வைத்தியர் மணிகண்டன் கள ஆய்வின்போது எடுத்துக் கூறினார். ஒதியமலை என்பது ஒதியமரங்காரணமாக ஏற்பட்டது போலச் செம்மலையும் ஆவாரஞ்செடி காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என்று கருதுவதும் பொருத்தமுடையதே.

கள்ளியடி என்பது கள்ளிச்செடி காரணமாக ஏற்பட்ட இடப்பெயராகும். முல்லைத்தீவு மாவட்டத்தில் முற்காலத்தில் கள்ளிச் செடிகள் சாதாரணமாக் காணப்பட்டுள்ளதைப் பதிவு செய்திருக்கும் லூயிஸ் செம்மலை, மாத்தளன், சின்னாறு போன்ற இடங்களில் நாககள்ளி என்னும் கள்ளிவகை பரவலாகக் காணப்பட்டதாகவும் அவை மிகவும் பெருகிக் காணப்பட்டதால் ஒருவகைப் பூச்சியினங்களைப் பயன்படுத்தி அவை அழிக்கப்பட்டன பற்றியும் குறிப்பிட்டுள்ளார்[43].

நீலியடி என்னும் இடம் அவுரிசி செடி காரணமாக ஏற்பட்டதாகும். நீலி என்பதற்கு அவுரி என்றும் பெயர்[44]. மந்து என்பது காவிளைச் செடியைக் குறிக்கும்[45]. மந்துவில் என்பது காவிளை காரணமாக ஏற்பட்டிருத்தல் எண்ணத்தகும். யாழ்ப்பாண மாவட்டத்திலும் மந்துவில் என்ற இடப்பெயர் இக்காரணம் பற்றி ஏற்பட்டதாக இக்கட்டுரையாசிரியர் எடுத்துக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குமரிக்கண்டம் என்பது பண்டைத்தமிழ்ப் பெருநிலப்பரப்பாக இருந்ததாகக் கூறப்படுகிறது. அதில் குமரி என்பது கற்றாழைச் செடி காரணமாக ஏற்பட்டதாகச் சித்தமருத்துவ அறிஞர் கூறுவர்[46]. குமரிக்கண்டத்தின் பெரும்பகுதி கடல் கொண்டுவிட்ட போதிலும் அதன் எஞ்சிய பகுதிகளில் இலங்கையும் ஒன்றாக விளங்குகிறது. இலங்கையில் குறிப்பாக வடக்கு மாகாணத்தில் பல இடங்களிலும் குமரிக்கற்றாழை எனப்படும் கற்றாழஞ்செடியைத் தற்காலத்திலும் காணக்கூடியதாகவுள்ளது. குமரிக்குளம் என்னும் இடமும் கற்றாழை காரணமாக ஏற்பட்ட ஓரிடமாகும்.

எங்கெங்கு காடு அழிக்கப்படுகிறதோ அங்கு காட்டுக்கத்தரி (வட்டுக்கத்தரி), தகரை, எருக்கலை, (காவிளாய்), போன்ற செடிகள்

பற்றையாக வளர்கின்றன. அவற்றை அழிப்பதும் இலகுவா விடயமல்ல என்று லூயிஸ்[47] கூறியுள்ளமைக்கு அமைய இங்கு இடப்பெயர்களுடன் தொடர்புடையதாக அடையாளங் காணப்பட்ட பல செடிகளும், பூண்டுகளும் முற்காலத்தில் இருந்து தற்காலம் வரை இம்மாவட்டத்தில் பரவலாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

**அட்டவணை -5 புற்பெயர்கள்**

| இல. | புற்பெயர் | கிராமப்பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | மூங்கில் | மூங்கிலாறு (கி.சே.பிரிவு 46)<br>கணுக்கேணி (கி.சே.பிரிவு 116,117) | 02 |
| 2 | கோரை | கோரையடிவயல் (கி.சே.பிரிவு 36)<br>கோரைமோட்டை (கி.சே.பிரிவு ) | 02 |
| 3 | பனை | பனைநின்றான் (கி.சே.பிரிவு 69)<br>பனையடி (கி.சே.பிரிவு 81)<br>பனங்காமம் (கி.சே.பிரிவு 11) | 03 |
| 4 | குரக்கன் | ஒட்டன் குளம் (கி.சே.பிரிவு 41)<br>ஒட்டுசுட்டான் (கி.சே.பிரிவு 61)<br>ஒட்டறுத்த குளம்(கி.சே.பிரிவு 13)<br>கேப்பைப்புலவு (கி.சே.பிரிவு 102) | 04 |
| 5 | அறுகு | அறுகுவெளி (கி.சே.பிரிவு 39)<br>அறுகோடை (கி.சே.பிரிவு 79) | 02 |
| 6 | தென்னை | தென்னைமரத்தடி (கி.சே.பிரிவு 82) | 01 |
| 7 | நெல் | நெற்புலவு (கி.சே.பிரிவு 111) | 01 |
| 8 | கற்புரப்புல் | கற்புரப்புல்லு (கி.சே.பிரிவு 107) | 01 |
| 9 | நாணல் | நாணல்வெளி (கி.சே.பிரிவு 82) | 01 |
| 10 | இரம்பைப்புல் | இறம்பைக்குளம் | 01 |
| 11 | பச்சைப்புல் | பச்சைப்ர்ல்மோட்டை (கி.சே.பிரிவு 40) | 01 |
| மொத்தம் | | | 19 |

பதினொரு வகையான புற்பெயர்களில் மொத்தம் பத்தொன்பது இடப்பெயர்கள் இம்மாவட்டத்தில் காணப்படுகின்றன. அவைபற்றிய விபரங்களை அட்டவணை -5 எடுத்துக்காட்டுகிறது. மூங்கிலுக்குக் கணு என்ற பெயருமுண்டு[48]. எனவே கணுக்கேணி என்பதில் கணு என்பது மூங்கில் காரணமாக ஏற்பட்டதாகும். தண்டு, தட்டை என்பவையும் மூங்கிலைக் குறிக்கும் பெயர்களாகும்[49]. அந்தவகையில் இம்மாவட்டத்திலுள்ள தண்டுவான், தட்டாமலை ஆகிய இடப்பெயர்களும் மூங்கில் காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என்று கருதுவதற்கு இடமுண்டு. கோரைமோட்டை, கோரையடிவயல் என்பன கோரைப்புல் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்களாகும். முல்லைத்தீவில் கோரைப்புல்லினமும் அதிகமாகவுள்ளன என்று கூறும் லூயிஸ் அதன் பெயரே சில குளங்களுக்கும், கிராமங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்[50].

குரக்கன் தானியம் அறுவடை செய்யப்பட்ட பின் அதன் வைக்கோல் போன்ற பகுதி ஒட்டு எனப்படும். ஒட்டு மிகுந்திருந்தமை காரணமாக ஒட்டன்குளம், ஒட்டு சுட்டான், ஒட்டறுத்தகுளம் போன்ற இடப் பெயர்கள் ஏற்பட்டிருக்கலாம். கதிர் தணிகாசலம் இக்கருத்தையே கொண்டுள்ளார்[51]. கேப்பைப்புல் என்பதும் தமிழ் மருத்துவ அகராதிகளின்படி கேழ்வரகு அல்லது குரக்கனையே குறிப் பிடுகின்றன[52].

இம்மாவட்டத்தில் உள்ள கற்பூரப்புல் என்னும் இடமும் முக்கியத்துவம் வாய்ந்த ஓரிடமாகும். முற்காலத்தில் இவ்விடம் கற்பூரப்புல்வெளி என்று அழைக்கப் பட்டது. இப்புல்லினம் இலகுவில் தீப்பற்றி எரியக்கூடியதாகும்.

குளக்கரைகளிலும், கைவிடப்பட்ட குளங்களிலும் வளரும் புல்லினங்களில் இரம்பைப்புல்லும் ஒன்றாகும். இப்புல்லினம் முல்லைத்தீவுப்பகுதியிலுள்ள கைவிடப்பட்ட குளப்படுக்கைகளில் அதிகம் காணப்பட்டதாக லூயிஸ் குறிப்பிட்டுள்ளார்[53]. இரம்பைப்புல் காரணமாக ஏற்பட்ட இடங்களில் தச்சனிறறம்பைக்குளமும் ஒன்றாகும். இறம்பை என்பதைத் தாமரை என்று கதிர் தணிகாசலம் குறிப்பிட்டுள்ளார்[54].

**அட்டவணை -6 கொடிவகை**

| இல. | கொடிப்பெயர் | கிராமப்பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | மல்லிகை | மல்லிகைத்தீவு (கி.சே.பிரிவு 39) | 01 |
| 2 | காஞ்சூரை | காஞ்சூரமோட்டை(கி.சே.பிரிவு 58)<br>காஞ்சூரமோட்டை (கி.சே.பிரிவு 107) | 02 |
| 3 | குறிஞ்சி | குறிஞ்சியடி (கி.சே.பிரிவு 80) | 01 |
| 4 | சீந்தில் | அமுதங்குளம் (கி.சே.பிரிவு 126) | 01 |
| 5 | அடம்பன் | தச்சனடம்பன் (கி.சே.பிரிவு 70) | 01 |
| 6 | பிரம்பு | பிரப்புவெட்டுவான் (கி.சே.பிரிவு 54)<br>பிரம்படி (கி.சே.பிரிவு 102) | 02 |
| 7 | வள்ளி | வள்ளிப்புனம் (கி.சே.பிரிவு 45)<br>வல்லியப்பளை (கி,ச.பிரிவு 11) | 02 |
| 8 | தெகிழங்கொடி | சின்னத்தொகிலங்குளம் (கி,ச.பிரிவு 01)<br>தெகிலங்குளம் (கி.சே.பிரிவு 01) | 02 |
| மொத்தம் | | | 12 |

எழுவகையான கொடிப்பெயர்களுடன் சம்பந்தப்பட்டதாகப் பன்னிரண்டு இடப்பெயர்கள் அமைந்திருப்பதை அட்டவணை 6 எடுத்துக்காட்டுகிறது. காஞ்சூரைமோட்டை, பிரப்பு வெட்டுவான் ஆகியவை பற்றி முன்னரே குறிப்பிட்டுள்ளோம். குறிஞ்சி என்பது பெருங்குறிஞ்சா அல்லது பாலைக்கொடியைக் குறிக்கும். வள்ளி, வல்லி என்பன வள்ளிக்கொடியைக் குறிப்பனவாகும். தெகிழ் அல்லது தெக்கில் என்பது கடற்கரைப் பிரதேசங்கள்,

கண்டல் நிலங்களில் காணப்படும் ஒரு உலர்வலயத்துக்குரிய கொடியாகும்[55]. சின்னத்தொகிலங்குளம், தெகிலங்குளம் என்பன இக்கொடியுடன் தொடர்புடைய இடப்பெயர்களாகக் காணப்படுகின்றன. இம்மாவட்டத்தில் குருவிச்சை என்னும் ஒட்டுண்ணித் தாவரத்துடன் தொடர்பாக அமைந்துள்ள குருவிச்சையாறு (ஒட்டுசுட்டான்), கச்சல்கொடியுடன் தொடர்பாக அமைந்துள்ள கச்சல் கொடியாறு (உடையாவெளி) என்பவை பற்றிய லூயிஸ் குறிப்புகளும் காணப்படுகின்றன[56].

**அட்டவணை -7 நீர்த்தாவரங்கள்**

| இல. | தாவரப்பெயர் | கிராமப்பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | நீலோற்பலம் | ஒலுமடு (கி.சே.பிரிவு 71)<br>ஒலுவன்புலவ(கி.சே.பிரிவு 36) | 02 |
| 2 | தாமரை | தாமரைக்குளம் (கி.சே.பிரிவு 48)<br>தாமரைக்கேணி (கி.சே.பிரிவு 121) | 02 |
| மொத்தம் | | | 04 |

நீர்த்தாவரங்களில் நீலோற்பலம், தாமரை ஆகிய இரண்டுடன் சம்பந்தப்பட்ட நான்கு இடப்பெயர்கள் இருப்பதை அட்டவணை - 7 எடுத்துக்காட்டுகிறது. ஒலு என்ற சிங்களச் சொல்லுக்கு நீலோற்பலம் என்று கருத்து[57]. ஒலுக்குளம், ஒலுவன்புலவு என்பன நீலோற்பலம் காரணமாக ஏற்பட்டிருத்தல் வேண்டும். முல்லைத்தீவுப் பிரதேசத்தில் முற்காலத் திலிருந்து கணிசமான அளவு சிங்கள மக்கள் வாழ்ந்து வந்தமை காரணமாக அவர்கள் வசித்த இடங்கள் சிங்களப் பெயர்களில் அழைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

## முடிவுரையும், பரிந்துரைகளும்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 632 கிராமப் பெயர்களில் 30 சதவீதமான பெயர்கள் (183) மூலிகைத்தாவரங்களுடன் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. கணிசமான கிராமங்கள் நிர்வாக வசதிக்காக வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு, மத்தி என்றவாறு பிரிக்கப்பட்டுள்ளதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. உதாரணமாக முள்ளியவளை என்ற கிராமம் முள்ளியவளை வடக்கு (கி.சே. பிரிவு 104), முள்ளியவளை மேற்கு (கி.சே. பிரிவு 103), முள்ளியவளை மத்தி (கி.சே. பிரிவு 106), முள்ளியவளை தெற்கு (கி.சே.பிரிவு 107), முள்ளியவளை கிழக்கு (கி.சே. பிரிவு 108) என்று பிரிக்கப்பட்டிருத்தல் காண்க. இங்கு முள்ளியவளை என்ற கிராமம் நிர்வாக ரீதியாகப் பார்க்குமிடத்து ஐந்து கிராமங்களாகக் கணக்கிடப்படுகிறது. ஆனால் எமது ஆய்வில் இந்த ஐந்து கிராமங்களும் முள்ளியவளை என்ற ஒரு கிராமமாகவே கருத்திற் கொள்ளப்படுகிறது. அந்தவகையில் நோக்கும்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மொத்தக் கிராமங்களின் எண்ணிக்கை 632 இலும் பார்க்கக் குறைவாகவே கொள்ளப்பட வேண்டியுள்ளது.

அடுத்து, 183 மூலிகைத்தாவரங்களில் 64 சாதவீதமானவை (118 தாவரங்கள்) மரவகுப்பைச் சேர்ந்தவையாகக் காணப் படுகின்றன. இது இம்மாவட்டத்தின் மரச்செறிவை எடுத்துக் காட்டுவதுடன் மரங்கள் பல்லாண்டு வாழ்பவையாக ஓரிடத்தில் நிலையாக நிலைத்திருப்பதால் அவ்விடத்தை இலகுவாக அடையாளப்படுத்துவதற்காக

அவற்றின் பெயரைக்கொண்டு அவ்விடத்தை அழைப்பது ஏற்புடையதே. மரங்களை அடுத்து 16 சதவீதமானவை (30 மூலிகைச் செடிகள்) செடிவகைகளாகவும், 10 சதவீதமானவை புல் வகையாகவும்(19 மூலிகைகள்), 8 சதவீதமானவை கொடிவர்க்கமாகவும் (12 மூலிகைகள்), 2 சதவீதமானவை (4 மூலிகைகள்) நீர்த்தாவரங்களாகவும் இருத்தல் குறிப்பிடத்தக்கது.

இம்மாவட்டத்தின் கணிசமான பகுதி உலர்வலயக் காடாக இருப்பதால் இங்கு மரங்களுடன் செடி கொடிகளும் மிகுந்திருத்தல் இயல்பானதே. மேலும் காடும், காடு சார்ந்த முல்லைநிலங் காரணமாக இங்கு மந்தைவளர்ப்புத் தொழிலும் இருந்துள்ளது. தற்காலத்திலும் ஓரளவிற்குக் காணப்படுகிறது. ஆங்காங்கு கோரை, நாணல் மற்றும் பசும்புல்வெளிகள் காணப்படுவதில் வியப்பேதும் இல்லை.

மோட்டை, குளம், கேணி, புவல், ஓடை, வில்,மடு போன்ற நீர்நிலைகளுடன் தொடர்பாகப் பெரும்பாலான மூலிகை இடப் பெயர்கள் அமைந்துள்ளமையானது முற்காலத்தில் நீர்நிலைகளையண்டி மக்கள் குடியேறி வாழ்ந்தமைக்கும், அவ்விடத் திலுள்ள மூலிகைத்தாவரங்களுக்கு அவர்கள் கொடுத்துள்ள முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்துவதாகவுள்ளன.

பெரும்பாலான மூலிகைத்தாவர இடப்பெயர்களில் அவை தொடர்பான மூலிகைத்தாவரங்கள் சாதாரண வழக்கிலுள்ளவாறு வெளிப்படையாகக் காணப்பட்டாலும் சில பெயர்கள் திரிபடைந்தும், மறைபொருளாகவும் கூறப்பட்டிருத்தலும் நோக்கற்குரியது. திரிபடைதலுக்குக் காலமாற்றங்கள்காரணமாகவும், மறைபொருட்பெயர்களுக்கு அக்காலவழக்கு அல்லது அக்காலமக்களின் மூலிகைத்தாவரப் பாண்டித்தியமும் காரணமாக இருக்கலாம். கணிசமான மூலிகைத்தாவரப் பெயர்கள் சிங்களமொழித் தொடர்புள்ளதாக அமைந்துள்ளமை இப்பிரதேசத்தில் வாழ்ந்த சிங்கள மக்களினால் ஏற்பட்டதாகக் கருதப்படலாம்.

களஆய்வின்போது இங்கு கண்டறியப் பட்ட பலமூலிகைகள் பலவற்றை இம்மாவட்டத்தில் பரவலாகக் காணக்கூடியதாக இருந்தது. அவைதவிர வேறுபல மூலிகைகளையும் அவதானிக்க முடிந்தது. இம்மூலிகைகள் சில இடங்களில் அங்குமிங்குமாகவும், சில இடங்களில் ஓரிடமாகச் செறிந்தும் காணப்படுகின்றன. இம்மூலிகைகளில் பெரும்பாலானவை ஈழத்துப் புராதன சித்தமருத்துவ நூலான பரராசசேகரத்தில் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மூலிகைத்தாவர இடப் பெயராய்வுகளை மேலும் விரிவுபடுத்தி, ஒவ்வோரிடத்திலும் காணப்படும் மூலிகைத் தாவரங்களையும் அவை செறிவாகக் காணப்படும் இடங்களையும் அடையாளப்படுத்தி அவற்றைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டிய அவசியமும் தேவையும் எமக்குள்ளது. இவை தொடர்பான அடுத்தகட்ட நகர்வுகளுக்கு இவ்வாய்வுக்கட்டுரை தூண்டுகோலாக அமையும் என்பது ஆய்வாளரின் நம்பிக்கையும், பேரவாவுமாகும். அதேவேளை குடியிருப்பு, விவசாயம், தொழிற்சாலைகள் போன்ற பல்வேறு காரணங்களுக்காக இங்குள்ள காடுகள் அழிக்கப்பட்டு வருவதையும் வருத்தத்துடன் குறிப்பிட்டாக வேண்டும். நிர்வாகத்திலுள்ளவர்களும், இயற்கை மூலிகை ஆர்வலர்களும் அவற்றைத் தடுப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளல் வேண்டும்.

**நன்றியுரை**

இந்த ஆய்வின்போது தகவல்களைச் சேகரிக்க உதவிய அனைவருக்கும், குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் நேரில் சென்று தகவல்களைச் சேகரிப்பதில் உதவிய எனது மாணவர் மருத்துவர் வ. ஆதவன் அவர்கட்கும்,

மூலிகை இடப்பெயர்கள் பற்றியும், மூலிகைத்தாவரங்கள் பற்றியும் அரியபல தகவல்களைக் கூறிய மூத்த பரம்பரை வைத்தியர் அ. நாகமணி, ச. மணிவண்ணன், எஸ். சிவசுப்பிரமணியம் ஆகியோருக்கும் இக்கட்டுரையாசிரியரின் நன்றிகள்.

**உசாத்துணை நூல்கள்**


1. சிவசண்முகராஜா சே. (2018) யாழ்ப்பாண மாவட்டத்தில் மூலிகைப் பெயர்களில் அமைந்துள்ள ஊர்ப்பெயர்கள் - ஓர் ஆய்வு - சித்தமருத்துவ வளர்ச்சிக்கழகம், யாழ்ப்பாணம்
2. சிவசண்முகராஜா, சே. (2014) கிளிநொச்சி மாவட்டத்தில் மூலிகைப் பெயர்களில் அமைந்துள்ள ஊர்ப்பெயர்கள் - ஓர் ஆய்வு கிளிநொச்சிமாவட்ட தொன்மையின் மூலங்கள் கிளிநொச்சி செயலக வெளியீடு பக். 361 - 372
3. சிவசண்முகராஜா சே. (2019) இலங்கையில் மன்னார் மாவட்ட இடப்பெயர்களில் மூலிகைத் தாவரங்களின் செல்வாக்கு ஓர் ஆய்வு Shanlax International Journal of Tamil Studies April pp.140-152
4. சிவசண்முகராஜா சே (2020) இலங்கை வவுனியா மாவட்டத்திலுள்ள தாவர மூலிகை இடப்பெயர்கள் தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் January பக் 28-44
5. இராசநாயகம் செ. (2003) யாழ்ப்பாணச் சரித்திரம்; Asian Educational Services New Delhi, Chennai ப. 1
6. சிவசண்முகராஜா சே. (1997) சுதேசமருத்துவக் கையகராதி. சித்தமருத்துவ வளர்ச்சிக் கழகம், யாழ்ப்பாணம் ப. 112
7. ……..Annual Performance Report and Accounts – (2018). Mullaitivu District p08.
8. ……...District Satistical Hand Book, (2011). Mullaitivu District pp 02 – 14..
9. Lewis J.P. (2012) இலங்கையின் வன்னி மாவட்டங்கள் ஒரு கையேடு (தமிழில்) (வவுனியா - முல்லைத்தீவு), சேமமடு பதிப்பகம். 2012 பக்.382 (Lewis J.P. (1895), Manual of The Vanni Districts (Vavuniya and Mullaittvu), Colombo.)
10. ……. (1903) வைத்தியமலையகராதி. சென்னை. ப. 24
11. கழகத்தமிழ் அகராதி, (1980), திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை ப. 389
12. சிவசண்முகராஜா சே. (2012), மூலிகைத் திறவுகோல், சித்தமருத்துவ வளர்ச்சிக் கழகம், யாழ்ப்பாணம். ப. 254
13. சாம்பசிவம்பிள்ளை ரீ. வீ, (1931), தமிழ் ஆங்கில அகராதி பாகம் - 1, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை சென்னை. ப. 497
14. Tamil Lexicon, (1982), Vol..I, University of Madras. ப. 68
15. மேற்படி Lewis J.P ப. 85
16. மேற்படி மூலிகைத்திறவு கோல் பக்.143
17. பொன்னையா ஐ, (ப-ஆ) (1928), பரராசசேகரம் சிரரோக நிதானம், சைவப்பிரகாச யந்திரசாலை, யாழ்ப்பாணம்.பக்245
18. மேற்படி Lewis J.P. பக். 383
19. சாம்பசிவம்பிள்ளை ரீ.வீ, (1998), தமிழ் ஆங்கில அகராதி பாகம் - 4,பகுதி -1, இந்தியமருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறைசென்னை. ப.497
20. சாம்பசிவம்பிள்ளை ரீ.வீ. (1991), தமிழ் ஆங்கில அகராதி, பாகம்- 2, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை, சென்னை. பக். 1716,1717
21. தேவேந்திரநாதபண்டிதர் (1958), பச்சிலைவர்க்க பசுமூலி அகராதி, சென்னை. ப. 12
22. குகதாசன் கே.எஸ்.. (2004), தாவரவியல் மற்றும் பொதுவான சிறப்பியல்புகளுள்ளசிலதாவரங்களின்

சிரல் - சிறு குறிப்புகளுடன், தொண்டைமானாறு வெளிக்கள நிலையம், யாழ்ப்பாணம். பக். 267
23. மணி பி.எஸ். (1992), வளம் தரும் மரங்கள், பாகம் -4 நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பிரவேட் லிமிடெட், சென்னை. பக். 53
24. மேற்படி வைத்தியமலையகராதி ப. 52
25. மாதையன் பெ., சித்திரபுத்திரன் எச்., (1986), மர இனப் பெயர்த் தொகுதி, (தொகுதி -1), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் பக். 499
26. திலகநாயகம்போல். ப. (2000) ஊரும்பேரும் - வலிகாமம் வடக்கில் ஓர் ஆய்வு. வலிகாமம் (வடக்கு பிரதேசசபை மலர்)
27. மேற்படி வைத்தியமலையகராதி பக்46
28. சாம்பசிவம்பிள்ளை ரீ.வீ.. (1994). தமிழ் ஆங்கில அகராதி பாகம் - 5, தமிழ்நாடு அரசாங்கம். ப. 978
29. மேற்படி வைத்தியமலையகராதி ப. 19
30. மேற்படி Lewis J.P.ப. 386
31. மேற்படி Lewis J.P. ப. 379
32. மேற்படி Lewis J.P. ப. 106
33. கந்தசாமி முதலியார் வைத்திய மூலிகை அகராதி. பி.இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ், சென்னை. ப. 235
34. மேற்படி சுதேச வைத்திய மூலிகைக் கையகாராதி. ப. 104
35. மேற்படி இலங்கை வவுனியா மாவட்டத்திலுள்ள தாவர மூலிகை இடப்பெயர்கள்
36. சாம்பசிவம்பிள்ளை ரீ.வீ. (1991), தமிழ் ஆங்கில அகராதி, பாகம்-2, இந்தியமருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, சென்னை. பக். 190,192
37. மேற்படி வைத்திய மலையகராதி ப. 32
38. முருகேச முதலியார் க. ச. (1933) பாலவாகடம், சென்னை கவர்ன்மென்ட் பிரஸ் பக். 138, 205, 220
39. மேற்படிமர இனப் பெயர்த் தொகுதி பக். 310
40. மேற்படி பச்சிலைவர்க்க பசுமூலி அகராதி, ப. 37
41. மேற்படி பச்சிலைவர்க்க பசுமூலி அகராதி, ப. 38
42. மேற்படி கழகத் தமிழ் அகராதி ப. 484
43. மேற்படி Lewis J.P. பக்.379, 380
44. மேற்படி பச்சிலைவர்க்க பசுமூலி அகராதி, ப 85
45. குமாரசுவாமி. எஸ்.டபிள்யு. (2003) வடமாகாணத்துச் சில ஊர்ப்பெயர்கள் - யாழ்ப்பாணம், 1918 (யாழ்ப்பாண வைபவ கௌமுதி என்ற நூலின் பின்னிணைப்பாக இது உள்ளது) பக். 23
46. இராமநாதன் பொ. (2008), சித்தமருத்துவத்தின் தோற்றமும் வளர்ச்சியும், தாவடி, யாழ்ப்பாணம். பக். 15
47. மேற்படி Lewis J.P. பக். 380
48. மேற்படி சாம்பசிவம் பிள்ளை அகராதி பாகம் - 2, பக். 1012
49. மேற்படி பச்சிலைவர்க்க பசுமூலி அகராதி, பக். 71,72
50. மேற்படி Lewis J.P. ப. 380
51. கதிர் தணிகாசலம், (1992), தமிழர் வரலாறும் இலங்கை இடப் பெயராய்வும், சரவணா பதிப்பகம், சென்னை. பக். 90
52. மேற்படி பச்சிலைவர்க்க பசுமூலி அகராதி, ப. 51
53. மேற்படி Lewis J.P. ப. 380
54. மேற்படி தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயராய்வும், ப. 189
55. மேற்படி தாவரவியல் மற்றும் பொதுவான சிறப்பியல்புகளுள்ள சில தாவரங்களின் சிரல் - சிறு குறிப்புகளுடன் ப. 143
56. மேற்படி Lewis J.P. ப. 6, 13,. 379,
57. மேற்படி மூலிகைத்திறவுகோல் பக். 269.